## மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021
நிகழ்நிலையாகவும் மென்பிரதியாகவும்

**தமிழ்மொழியும் இலக்கியமும்**
**தரம் 10**

| 22 | T | I |
|---|---|---|

ஒரு மணித்தியாலம்

**கவனிக்க:**

(1) எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையானவினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டவிடைகளில் சரியானஅல்லதுமிகப் பொருத்தமானவிடையைத் தெரிவுசெய்க

**தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1.**"**கோவே இராசகுல திலகா." இங்கு **குல** என்பதன் பொருள்

(1)பரம்பரை (2) கூட்டம் (3) மரபு (4) இனம்

2."அங்கவை நண்ணுறப் பெறல் திண்ணம்" இங்கு **நண்ணுதல்** என்பதன் ஒத்தசொல்

(1)விரும்புதல் (2)சேர்தல் (3)வெறுத்தல் (4)அடைதல்

3. "நாவலர் அவர்கள் அவதானிக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்." இங்கு **ஞாபகம்** என்பதன் எதிர்ச்சொல்

(1)மறதி (2)நினைவு (3)அசாத்தியம் (4)குழப்பம்

4.**"**மகிழ்ச்சியில் என் கண்ணில் நீர் ததும்பி நின்றது". இங்கு **மகிழ்ச்சி** என்பதன் எதிர்ச்சொல்

(1)சோம்பல் (2)துக்கம் (3)சோர்வு (4)வாட்டம்

**5."**உற்றிடு பாம்பெள்ளெனவே ஓது". இங்கு **உற்றிடு** என்ற சொல் தரும் பொருள்

(1)அடைந்திடும் (2)ஏற்றிடும் (3)ஒத்திடும் (4)பார்த்திடும்

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

6.486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார். இங்கு **பரணி** என்பது

(1)பேரிலக்கியம் (2)சிற்றிலக்கியம் (3)பெருங்காப்பியம் (4)சிறுகாப்பியம்

7.பின்வருவனவற்றில் தொடர்பற்ற சொற்களின் இணைப்பு

(1) பிரசண்டம் - புயல் (2)விவேகி - மேதை

(3) வேறுவியாசம் –போலிக்காரணம் (4)அங்கவஸ்திரம் - ஆவாகனம்

8.புவனம் மூன்றும் வலஞ் செய்யும் நாடு இங்கு புவனம் மூன்று என்பன

(1) மேல், கீழ், இடை (3)வேர், மரம், பயன்

(2) பிறப்பு, வாழ்வு, இறப்பு (4)நித்தியம், நைமித்தியம், காமியம்

9.சுவர்க்கம், அமராபதி, மோட்சம் என்னும் சொற்கள் குறிக்கும் பொருள்

(1) முக்தி (2)நடுநிலை (3) பாதை (4)வீடுபேறு

10.மௌஸ், மௌஸ் பாட், டிஸ்குகள், பேப்பர் என்று ஊருப்பட்ட சாமான்கள். இங்கு டிஸ்கு (Disk) என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்

(1)மென்பொருள் (2)இறுவெட்டு (3)வருடி (4)சுட்டி

11.பிள்ளை என்ற இளமை மரபுப் பெயருக்குப் பொருத்தமற்றது

(1) கிளி (2)தென்னை (3) குருவி (4) கீரி

12.போரிலே இறந்தவீரன் பொருட்டு நடப்படுவது

(1)நடுகல் (2)உரைகல் (3) கல்வெட்டு (4)மெய்க்கீர்த்தி

13.பிற்காலத் தேவைகளுக்காக சேர்த்து வைக்கப்படும் செல்வம்

(1) ஏகபோகம் (2)எய்ப்பில் வைப்பு (3)நிந்தகம் (4)சங்கநிதி

14.அது அசையவில்லை குழையடிப்பது ஒன்று தான் பாக்கி. இங்கு குழையடித்தல் என்ற மரபுத்தொடர் தரும் பொருள்

(1) குளிர்மைப்படுத்தல் (2) அருட்டுதல்

(3) ஞாபகப்படுத்தல் (4) தட்டிக்கொடுத்தல்

15.பொய்மையின் கேடு என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி

(1) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
(2) உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்
(3) அலைமோதும் போதேதலை முழுகு
(4) இரக்கப்போனாலும் சிறக்கப் போ

16.கெடு குடி சொற்கேளாது என்ற பழமொழியின் கருத்து
(1) தீய வழியை விரும்புபவர் நற்புத்தி கேளார்
(2) சிறு வயதில் திருந்தாதவர் பெரியவராகியும் திருந்தார்
(3) கெட்ட குடிமக்கள் திருந்தமாட்டார்
(4)சொற்களை குடிமக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்

17.ஒருவரது செயற்பாடுகளை எப்பொழுதும் அவதானிக்க வேண்டும் என்பதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
(1) வைத்தகண் வாங்காமல் பார்ப்பது
(2) வழிமேல் விழிவைத்து
(3) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்
(4) ஊனுறக்கமின்றி

18.(அ) நேற்றுமுழுவதும் நல்லமழைபெய்தது
(ஆ)கிணறுகள் அனைத்தும் நிரம்பிவிட்டன
மேற்படி இரு வாக்கியங்களையும் இணைப்பதற்கு மிகப்பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) எனினும் (2) அல்லது (3) ஆகையினால் (4) இருப்பினும்

19.கம்பியூட்டர் முந்திப்பிந்தி வாங்கியும் அனுபவமில்லை. இங்கு முந்திப்பிந்தி என்பது
(1) இரட்டைக் கிளவி (2) இணைமொழி
(3) அடுக்குத்தொடர் (4) அடுக்கிடுக்குத்தொடர்

20.ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பதென்று பாய்ந்து வந்தார். இங்கு ‘அவுக்’ என்ற ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்துவது
(1) விரைவு (2) வெளிப்படை (3) உற்சாகம் (4) கோபம்

21.ககரம்g என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிப்பது

(1) கப்பல் (2) தேகம் (3) தீங்கு (4) சுகம்

22.குறவனும் குரங்கும் சென்றனர் என்பது
(1) திணைவழுவமைதி (2) பால் வழுவமைதி
(3) எண்வழுவமைதி (4)இடவழுவமைதி

23.சித்திரித்தான் என்ற சொல்லின் பகுதி
(1)சித்தம் (2)சித்திரி (3)சித்திரித்தல் (4)சித்திரம்

24.நன்னிலம் என்பதைப் பிரித்தெழுதினால்

(1) நல்ல +நிலம் (2) நல் +நிலம்

(3) நன்மை +நிலம் (4) நால் +நிலம

25.“புலன்களோடு கரணமும் ஆவியும்” இங்கு இடம்பெறும் வேற்றுமை

(1) இரண்டாம் வேற்றுமை (2) மூன்றாம் வேற்றுமை

(3) நான்காம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை

26.“பண்டே பழகியிருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை” இங்கு இடம்பெறும் எழுவாய் யாது?

(1) பண்டு (2) அறியார் (3) புல்லர் (4) நல்லோர்

27.வனப்பு மிக்க கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே ஏறிக்கொண்டு. இங்கு இடம்பெறும் அணி

(1) உவமைஅணி (2) உருவகஅணி

(3) உயர்வுநவிற்சிஅணி (4) தற்குறிப்பேற்றஅணி

28.மிக்காரைச்சேர்தல் மிக மாணமுன் இனிதே. இங்கு இடம் பெற்ற மாண் என்பது எவ்வகைச்சொல்

(1) பெயர் அடிச்சொல் (2) வினை அடிச்சொல்

(3) இடை அடிச்சொல் (4) உரி அடிச்சொல்

29.மிகப் பயங்கரமாகப் பிளிறின. பிளிறின என்பது

(1) பெயர்த்தொடர் (2) வினைத்தொடர்

(3) இடைத்தொடர் (4) உரித்தொடர்

- **பொருத்தமான உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவுசெய்க**

30.(1) செயப்படுபொருள் குன்றிய வினை : நட,வா, இரு

(2) செயப்படுபொருள் குன்றாத வினை : உண்,படி, பாடு

(3) தன்வினை : உண்டான், பாடினான், கட்டினான்

(4) பிறவினை : கட்டப்பட்டது, கொல்லப்பட்டது, எழுதப்பட்டது

31.(1) ஆக்கப்பெயர் : முதலாளி, பெண்ணியம், கல்வி

(2) கூட்டுப்பெயர் : வானொலி, கடற்கரை, தொலைக்காட்சி

(3) கூட்டுவினை : எழுதுகோல், கண்டுபிடி, முன்னேறு

(4) தொழிற்பெயர் : பொறியியல், தையல், ஆடுதல்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

32.இடர் காலத்தில் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் போக்குவதற்கு அரசாங்கத்தால் …………………. வழங்கப்பட்டது .

(1) உதவித்தொகை (2) ஊக்குவிப்புத்தொகை
(3) அன்பளிப்புத்தொகை (4) மானியத்தொகை

33. …………………..எடுக்க நிற்பது போல் ஆவலோடு நின்றாள் என் மனைவி

(1) ஆராத்தி (2) ஆலாத்தி (3) ஆலத்தி (4)ஆரத்தி

34.விலை நிர்ணயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசால் புதிய…………………. அறிவித்தல் வெளியிடப்பட்டது

(1) வர்த்தமானி (2) வெள்ளையறிக்கை
(3) சுற்றுநிருபம் (4)அறிக்கை

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க**

35.நீயோ அவனோ நானோ யார் இதைச்

(1) செய்தாய் (2) செய்தது (3) செய்தீர் (4)செய்தார்

36.பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிபர் பெற்றோருடன்

(1) கருத்துரைத்தார் (2) கலந்துரையாடினார்
(3) அறிவுரை கூறினார் (4) விழிப்புணர்வைச் செய்தார்

**பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

காடு களைந்தோம் - நல்ல
களனி திருத்தியும் உழவுபுரிந்தும்
நாடுகள் செய்தோம் - அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம் - அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்
பாடுகள் பட்டோம் - புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்

37.இப்பாடல் யாருடைய குரலாக ஒலிக்கின்றது

(1) உழவர்கள் (2) தொழிலாளர்கள்
(3) விவசாயிகள் (4)மீனவர்கள்

38.நாற்றிசை என்பதைப் பிரித்தெழுதினால்

(1) நான்கு + திசை (2) நால் + திசை

(3) நா +திசை (4) நல்ல + திசை

39.இங்கு களனி என்பது குறிக்கும் பொருள் யாது

(1) நிலம் (2) ஆறு (3) குளம் (4) வயல்

40.கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. இவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கு ஏற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

(அ) இவ்வுண்மையை எல்லோரும் பின்பற்ற வேண்டும்
(ஆ) ஆனாலும் முயற்சியிருந்து விடுபடாமல் இறுதியில் வெற்றி பெற்றர்
(இ) தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழை எரியச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்
(ஈ) பல தடவைகள் மின்குமிழ் எரியவில்லை. தோல்வியடைந்தார்
(உ) தோல்வியே வெற்றிக்கான அடித்தளம் என்ற உண்மைய அவர் உலகிற்கு எடுத்துக் கூறினார்

(1) (உ), (அ), (ஆ), (இ), (ஈ) (2) (உ), (இ), (ஈ), (அ), (ஆ)

(3) (இ), (ஈ), (ஆ), (உ), (அ) (4) (இ), (ஈ), (உ), (அ), (ஆ)

**(40 x 1 = 40 புள்ளிகள்)**